Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 218 உள்ளூர் - 06.08.2026 வியாழக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 218 வெளியூர் - 07.08.2026 வெள்ளிக்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

'மகாலட்சுமி ராஜயோகம்': ஆக.9 முதல் அதிர்ஷ்டம்!

1518 பயிற்சி பணியிடங்கள்... TNSTC–யில்!

135 ஆண்டுகள் பழைய வங்கி சட்டம் அவுட்!

மதுபானம்; இனி ஆன்லைன் முன்பதிவு!


## வயலுக்கு வளம்... உழவர்களுக்கு வரம்!

# தமிழக வேளாண் பட்ஜெட் 2026-27

## முக்கிய அம்சங்கள்...!!




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2026–2027ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் ர. வினோத் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சென்னை, ஆக. 06–

தமிழக சட்டப்பேரவையில் 2026–27–ம் நிதி ஆண்டுக்கான தவெக அரசின் முதலாவது பட்ஜெட் நேற்று (ஆகஸ்ட் 5–ம் தேதி) தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து இன்று (ஆக.6) வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் வினோத் தாக்கல் செய்தார்.

வேளாண் பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

> நஞ்சில்லா வேளாண் முறைகளை ஊக்குவித்து, விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்க நீலகிரி மாவட்டம் ஊட்டியில் புதிய வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம்அமைக்கப்படும். இதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு

> உழவர் சந்தைகளை புனரமைக்க ரூ.20 கோடி ஒதுக்கீடு.

> 50 உழவர் சந்தைகளில் மின்னணு விலைப் பலகைகள் அமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு

> ரூ.4 கோடியில் வேளாண் நுண்ணறிவு மற்றும் சந்தை மகத்துவ மையம் அமைக்கப்படும்.

> 'வான்மகள்' திட்டம் – 100 மகளிர் உட்பட 500 நபர்களுக்கு ட்ரோன் இயக்கப் பயிற்சி உரிமம், 50 பயிற்சி பெற்ற மகளிருக்கு 50 சதவீத மானியத்தில் ட்ரோன்கள் வழங்க ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> நன்னெறி சாகுபடி; நஞ்சற்ற உற்பத்தி; உலகளாவிய ஏற்றுமதியை ஊக்குவிக்க ரூ.8.43 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> குறைந்த நீரில் அதிக மகசூல் உறுதி செய்ய நீர் மேலாண்மைக்கான துளித் துளித் தண்ணீர் திட்டம் செயல்படுத்தப்படும். 2.2 லட்சம் ஏக்கர் நிலம், 95,000 விவசாயிகள் பலனடைவர். இதற்காக ரூ.785 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> மதிப்புக் கூட்டுதலை மேம்படுத்த 4 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், 2 சிறப்பு வணிக வளாகங்கள் கட்டமைப்பு மேம்பாடு மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 2 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதிகள் ஏற்படுத்த ரூ.4.80 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> ரூ.5.20 கோடி செலவில் தமிழ்நாடு விவசாயிகளின் வருமான மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்படும்.

> திருக்கோவிலூர், முசிறி, காரைக்குடி, தாராபுரம்,கும்பகோணத்தில் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மற்றும் பயிற்சி மையங்கள்ரூ.4.6 கோடி செலவில் உருவாக்கப்படும்.

> இ–வாடகை 2.0 செயலி மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் சேவையை வலுப்படுத்து 463 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்ய ரூ.20.31 கோடி ஒதுக்கீடு

> 100 விவசாயிகளுக்கு 50% மானியத்தில் கதிரடிக்கும் களங்கள் அமைக்க ரூ.2.8 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> ரூ.41 கோடியில் தென்னை சிறப்பு திட்டம், தென்னை டானிக் பூச்சி நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்துதல், கரூர் மாவட்டத்தில் தென்னை நாற்றுப் பண்ணை, தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம், கொப்பரைக்கு விலை ஆதரவுத் திட்டம் அரசு செயல்படுத்தவுள்ளது.

> தென்னை சார்ந்த பொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்கச் செய்ய ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம் (TNCPC) அமைக்கப்படவுள்ளது.

> கடலோர மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக நன்னீர் கிணறுகள் அமைத்து மிளகாய் மற்றும் கொத்தமல்லி சாகுபடிக்கு ருூ.49.4 லட்சம் ஒதுக்கீடு.

> பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான 50 ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்கள் ரூ.8.13 கோடி செலவில் அமைக்கப்படும்.

> 1000 விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியம் 80%மானியத்தில் மின்கட்டமைப்புடன் சாராத சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்க ரூ.23 கோடி ஒதுக்கீடு.

> மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து மற்றும் தென்னை ஆகியவற்றில் 100% மானியத்தில் 225 ஏக்கர் பரப்பளவில் தொடக்கம் முதல் இறுதி வரை இயந்திரமயமாக்குதலுக்கான செயல்விளக்கங்கள் அளிக்க ரூ.46.37 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> வேளாண் இயந்திரங்களைப் பழுது நீக்கி பராமரிக்கும் 15 மையங்கள் அமைத்திட 50% மானியம். இதற்காக ரூ.1.12 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> கிராம அளவிலான 50 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் 80% மானியத்தில் அமைக்கப்படும். இதில் மகளிர் சுய–உதவிக் குழுக்களுக்கு 30% ஒதுக்கீடு வழங்கப்படும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 100% மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகள் உருவாக்குதல் மற்றும் 75%மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகளை தூர் வாருதல் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.8.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களின் களப்பயிற்சிக்காக 6 புதிய பேருந்துகள் வாங்க ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> தஞ்சை மாவட்டம், சாக்கோட்டையில், 'நம்மாழ்வார்' " பெயரில் ஒரு புதிய உயிர்ம வேளாண்மை பட்டயப் படிப்புக் கல்லூரி ரூ.5 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

> ஆயிரம் ஏக்கர் பாசனம் பரப்பை உருவாக்கிட பொதுப்பிரிவைச் சார்ந்த 500 விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் பின்னேற்பு மானியத்தில் அமைத்தல் ஆகியனவற்றிற்கு அதிகபட்ச மானியம் 60% வழங்கப்படும். இதற்காக ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

> வேளாண் விளைப்பொருட்களுக்கு 100 சதவீதம் பயிர்க்காப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

> வேளாண் கண்காட்சி – தொழில்நுட்பமும் பாரம்பரியமும் சங்கமிக்கும் திருவிழா ரூ.3 கோடி செலவில் நடத்தப்படும்.

> உயிர்ம உரப் பயன்பாட்டை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ரூ.4000 சிறப்பு ஊக்கதொகை வழங்கப்படும்.

> மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் விருது வழங்கப்படும். வெற்றியாளர்களுக்கு முதல் பரிசு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ.ஒரு லட்சத்து 50 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ.ஒரு லட்சம் வழங்கப்படும்.

தகுதிகள்: சிறு, குறு விவசாயிகள் கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் நிலக்கடலை குறைந்தது 2 ஏக்கரில் சாகுபடி. தினை, சாமை, குதிரைவாலி மற்றும் எள் குறைந்தது 1 ஏக்கரில் சாகுபடி. செய்திருக்க வேண்டும்.

> மாவட்ட அளவில் 'வெற்றி விவசாயி விருது' வழங்கப்படும். முதல் பரிசு ரூ.50 ஆயிரம், இரண்டாம் பரிசு 25 ஆயிரம், தகுதிகள் : நெல் (இறவை & மானாவாரி) சோளம், கம்பு, மக்காசோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை மற்றும் பருத்தி குறைந்தது 2 ஏக்கர் சாகுபடி. செய்திருக்க வேண்டும்.

> 5 விவசாயிகளுக்கு சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது வழங்கப்படும். பரிசுத்தொகை ரூ.11லட்சம்

> விவசாயிகளின் அனைத்து தேவைகளுக்கும் 8 புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.27.82 கோடி செலவில் உருவாக்கப்படும்.

> வளமான மண்; வளமான வருங்காலம் என்பதால், மண்ணின் வளத்தை பாதுகாக்க 'தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம்' ரூ. 122.51 கோடி செலவில் உருவாக்கப்படும்.

> திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பை மேம்படுத்த ரூ.3.56 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> விதை சுத்திகரிப்புத் திறனை அதிகரிக்க 3 புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ரூ.7.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 17,315 ஏக்கருக்கு விதைக்கரும்பு மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.9.36 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்க ரூ.9 கோடி மதிப்பீட்டில் கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

> ரூ.2 கோடி மதிப்பீட்டில் பனை பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப்படும். இதன் மூலம் பனை விதைகள், பனங்கன்றுகள் விநியோகம், பயிற்சி அளித்தல் மற்றும் பனைபொருள் உற்பத்திக் கூடாரங்கள் செயல்படுத்தப்படும்.

> 'வெற்றி இல்லத்தரசி வீட்டுத் தோட்டம்' – மாடித் தோட்டம் அமைக்க இடுபொருள் தொகுப்புகள், காய்கறி விதைத் தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள், நீரியல் தோட்டம், செங்குத்துத் தோட்டம், நிழல்வலைக் குடில்கள் வழங்கப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> தரமான விதை! வளமான விவசாயம் என்ற அடிப்படையில், நெல் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியத்திற்கான மாநில அரசின் சிறப்புத் திட்டம் ரூ 34.72 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

> AI உழவர் செயலி – ஒவ்வொரு உழவருக்கும் தனிப்பயன் சேவைகள் வழங்க AI அடிப்படையிலான உழவர் செயலி உருவாக்கப்பட்டு ஸ்மார்ட் வேளாண்மை குறிப்புகள் வழங்கப்படும்.

> பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் தன்னிறைவுக்கான இயக்கம் ரூ.203.64 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்க 'தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்' ரூ..63.81 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> 1 கோடி விவசாயிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் மண் வள அட்டைகள் வழங்கப்படும்.

> சாமை, தினை, வரகு, குதிரைவாலி, பனிவரகு போன்ற பயிர்களின் சாகுபடியை இருமடங்காக அதிகரிக்க 'தமிழ்நாடு குறுதானிய இயக்கம்'ரூ.7.61 கோடி மதிப்பீட்டில் இயங்கும்.

> அதிக ஊட்டச்சத்து நிறைந்த சீமைத் தினை (Quinoa), பாப்பரை (Buck Wheat) குலசாமை (Brown Top Millet) ஆகிய பயிர்களின் செயல்விளக்கத் திடல்கள் ரூ.30 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

> ரூ.27.21 கோடி மதிப்பீட்டில் பருத்தி உற்பத்தியைப் பெருக்கிட 'பருத்தி மறுமலர்ச்சி இயக்கம்' உருவாக்கப்படும்.

> ரூ.36 கோடி செலவில் மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

> விவசாய நிலங்களில் நிரந்தரப் பசுமைக்கு வேளாண் காடுகள் திட்டம்ரூ.17.70 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

> காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பயிர் இழப்புகளைத் தடுக்க காட்டுப்பன்றி சேதத் தடுப்புத் திட்டம் ரூ.7.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

> அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம் ரூ.56.72 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள், உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் 20 % கூடுதல் மானியம் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு மின்மோட்டார், சூரிய சக்தி பம்புசெட்டுகள், 300 ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும்.

> மழை, வெயிலிலிருந்து விளைபொருட்களைப் பாதுகாக்க 43,500 தார்ப்பாய்கள் வாங்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> எல் நினோ தாக்கத்தால் 12 மாவட்டங்களில் அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் பட்ஜெட்டுக்குப் பின் அரசியலில் பரபரப்பு!



சென்னை, ஆக. 06–

தமிழக சட்டப்பேரவையில் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு முடிந்த நிலையில், அதிமுகவைச் சேர்ந்த அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் நீர்வளத்துறை அமைச்சர் என். ஆனந்தை இன்று சந்தித்தனர்.

இந்த திடீர் சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமாக நடைபெற்றதாகவும், அரசியல் ரீதியாக எந்த முக்கிய முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.






ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் ஆடிப்பூர தேரோட்ட திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஆகஸ்ட் 14–ம் தேதி காலை ஆடிப்பூர தேரோட்டம் நடைபெறுகிறது.

## ஈரான் போர் முடிவா?

## தங்கம் 7 வார உச்சம்... இனி ஏற்றம் தொடருமா?






சென்னை, ஆக. 06–

ஈரான் –அமெரிக்கா போர் பதற்றம் குறையும் என்ற நம்பிக்கையால் சர்வதேச சந்தையில் தங்கம் 7 வார உச்சத்தை எட்டியுள்ளது.

இதன் எதிரொலியாக சென்னை சந்தையில் 24 கேரட் தங்கம் 2 நாட்களில் கிராமுக்கு ₹600 உயர்ந்துள்ளது. போர் நிறுத்த பேச்சுவார்த்தை வெற்றி பெற்றால் தங்கம் மேலும் உயர வாய்ப்பு இருப்பதாக சந்தை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 06.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 21-ம் தேதி

## பீரோவில் அல்ல... முதலீட்டில் தங்கம்!




இந்தியர்களின் வாழ்க்கையில் தங்கம் என்பது வெறும் ஆபரணம் அல்ல; தலைமுறைகள் கடந்து வந்த பாரம்பரியம், பாதுகாப்பு, சேமிப்பு என்பவற்றின் அடையாளமாக இருந்து வருகிறது. ஆனால் காலம் மாறுவதுபோல தங்கத்தைப் பற்றிய புதிய தலைமுறையின் பார்வையும் வேகமாக மாறி வருகிறது.

உலக தங்க கவுன்சிலின் சமீபத்திய அறிக்கை, ஜென் Z தலைமுறையினர் தங்கத்தை அணியும் பொருளாக அல்ல, முதலீட்டு சொத்தாக பார்க்கத் தொடங்கியுள்ளனர் என்பதைக் காட்டுகிறது. டிஜிட்டல் கோல்டு, கோல்டு ETF, தங்கக் கடன் போன்ற புதிய நிதி வாய்ப்புகள் இளைஞர்களை அதிகம் கவர்கின்றன. தொடர்ந்து உயர்ந்து வரும் தங்க விலையும் இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இந்த மாற்றம் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், முதலீட்டின் உண்மையான நோக்கம் நீண்டகால செல்வ உருவாக்கம் என்பதை மறக்கக் கூடாது. குறுகியகால லாபத்திற்காக அடிக்கடி வாங்கி விற்பது, தங்க முதலீட்டின் பலனைக் குறைக்கும்.

இந்திய வீடுகளில் ஆயிரக்கணக்கான டன் தங்கம் பயன்பாடின்றி கிடப்பதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். அவற்றை நிதி சுழற்சிக்குள் கொண்டு வந்தால், தனிநபருக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பயன் ஏற்படும்.

பாரம்பரியத்தை மதித்தபடியே, காலத்திற்கு ஏற்ற முதலீட்டு முறைகளைத் தேர்வு செய்வதே இன்றைய தலைமுறையின் புத்திசாலித்தனம். தங்கம் பீரோவில் பூட்டப்பட வேண்டிய செல்வம் அல்ல; சரியான திட்டமிடலுடன் வளர்க்க வேண்டிய முதலீடு என்பதே புதிய சிந்தனையாக உருவெடுத்து வருகிறது.

## டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் அனைத்து மதுபானங்களுக்கும் ரசீது! உயர் நீதிமன்றம்!!



சென்னை, ஆக. 06–

தமிழ்நாடு டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் அனைத்து மதுபாட்டில்களுக்கும் ரசீது வழங்கப்பட வேண்டும் எனவும், அனைத்து கடைகளும் ரசீது புத்தகங்களை பராமரிக்க வேண்டும் எனவும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை முழுவதும் உள்ள 30க்கும் மேற்பட்ட சில்லறை மதுபானக் கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக வழக்கறிஞர் தேவராஜன் என்பவர் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவை விசாரித்தபோது, நீதிபதி ஜி.கே. இளந்திரையன் இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தார். இந்த உத்தரவை நடைமுறைப்படுத்தியது குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு டாஸ்மாக் நிர்வாகத்திற்கு உத்தரவிட்டு, வழக்கின் அடுத்த விசாரணையை ஆகஸ்ட் 7–ஆம் தேதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விட கூடுதலாக 10 ரூபாய் அல்லது அதற்கு மேல் வசூலிக்கும் முறைகேடுகள் இதன் மூலம் தடுக்கப்படும்.

மதுபானங்களின் சரியான விலை மற்றும் விவரங்கள் நுகர்வோருக்குத் தெளிவாகத் தெரியவரும். கூடுதல் விலைக்கு விற்கும் ஊழியர்கள் மீது பெறப்படும் புகார்களுக்கு இந்த ரசீதுகள் முக்கிய ஆதாரமாக விளங்கும்.

## குற்றாலத்தில் சிறப்பு கண்காணிப்பு குழு!



மதுரை, ஆக. 06–

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய உத்தரவிடக்கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றாலத்தில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்பு கண்காணிப்பு அமைக்க உத்தரவிட்டுள்ளது. அதோட், 'நந்தவன திட்டம்' குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மாவட்ட கலெக்டருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், குற்றாலத்தில் உள்ள கடைகளில் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. குற்றால அருவி பகுதிகளில் 72 கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாஜகவுக்கு ஷாக்.. திரிணாமுல் காங்கிரசுக்கு திரும்பும் 3 அதிருப்தி எம்.பிக்கள்?



புதுடெல்லி, ஆக. 06–

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் மம்தாவின் திரிணமுல் ணாமுல் காங்கிரஸ் பாஜகவிடம் தோற்று ஆட்சியை இழந்தது. வெற்றி பெற்ற 80 திரிணாமுல் எம்எல்ஏக்களில் 50க்கும் மேற்பட்டோர் தனி அணியாக பிரிந்து செயல்பட்டு வருகின்றனர். அவர்களையே எதிர்க்கட்சியாக சபாநாயகர் அங்கீகரித்துள்ளார். இதனிடையே அதிருப்தியால் திரிணமுல் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்த 20 எம்.பி.க்கள், பாஜகவின் என்டிஏ கூட்டணிக்கு ஆதரவு வழங்கும் வகையில் 'தேசியவாதக் குடிமக்கள் கட்சி' (NCPI) என்ற பிராந்திய கட்சியில் இணைந்தனர்

இந்த 20 எம்.பி.களில் உள்ள 3 முஸ்லிம் எம்பிக்கள் மீண்டும் மம்தா பானர்ஜியின் திரிணமுல் காங்கிரஸ் பக்கமே திரும்பக்கூடும் என தகவல் வெளியாகி உள்ளது.

முர்ஷிதாபாத் தொகுதி எம்பி அபூ தாஹிர் கான், ஜங்கிபூர் தொகுதி எம்பி கலிலூர் ரஹ்மான், பஹரம்பூர் தொகுதி எம்பி யூசுப் பதான் ஆகியோரே அந்த மூவர் ஆவர். பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற என்டிஏ எம்பிக்களின் கூட்டத்திற்கு NCPI அணியின் 17 எம்பிக்கள் மட்டுமே சென்றிருந்த நிலையில், இந்த 3 எம்பிக்களும் இரண்டாவது முறையும் பங்கேற்காமல் புறக்கணித்தனர்.

இதனிடையே நாடாளுமன்றத்தில் குடிமக்கள் அவர்களில் ஒருவரான அபூ தாஹிர் கான், "முஸ்லிம்களின் நலன்களுக்கு எதிராகச் செயல்படும் எந்தவொரு மசோதாவையும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம். நாங்கள் பாஜகவில் இணையவோ, என்டிஏ கூட்டணியில் தொடரவோ மாட்டோம்" என பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

திரிணமுல் காங்கிரஸின் மூத்த எம்பியான சௌகதா ராய் மற்றும் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர்களுடன் இந்த 3 எம்பிக்களும் தொடர்ந்து பேசி வருவதாகவும், அவர்கள் மீண்டும் மம்தா பானர்ஜி தலைமைக்கே திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

திரிணமுல் காங்கிரஸிலிருந்து பிரிந்த 20 எம்பிக்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை பாயாமல் இருக்க, மூன்றில் இரண்டு பங்கு (குறைந்தது 19 எம்பிக்கள்) எண்ணிக்கை பலம் தேவையாக உள்ளது.

இந்த 3 எம்பிக்களும் விலகி விட்டால் NCPI அணியின் எண்ணிக்கை 17 ஆகக் குறையும். இதனால் அவர்களின் எம்பி பதவிக்குச் சட்டரீதியான சிக்கல் எழக்கூடும்.

எனவே பாஜக மற்றும் மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி ஆகியோர் மற்ற எம்பிக்களைத் தக்கவைக்கவும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தவும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ராமர் கோவில் நன்கொடை விவகாரம்; பார்லி வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம்!




புதுடில்லி, ஆக. 06–

ராமர் கோவில் நன்கொடை முறைகேட்டைக் கண்டித்து பார்லி வளாகத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பார்லி கூட்டத் தொடர் கடந்த 20ம் தேதி துவங்கிய நிலையில், நீட் வினாத்தாள் கசிவு மற்றும் ராமர் கோவில் நன்கொடை விவகாரத்தை எழுப்பி எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், தொடர்ந்து 13 நாட்களாக இரு அவைகளும் முடக்கப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகள் குறிப்பிடும் விவகாரங்கள் குறித்து விவாதிக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக அறிவித்த நிலையிலும், எதிர்க்கட்சி எம்பிக்கள் அவையை நடத்த விடாமல் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், ராமர் கோவில் நன்கொடை முறைகேட்டைக் கண்டித்து பார்லி வளாகத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, டில்லி மாணவர்கள் போராட்டத்தின் போது, போலீசாரின் நடவடிக்கை குறித்து விவாதிக்க ஏதுவாக, கூட்டத் தொடரின் வழக்கமானப் பணிகளை ஒத்திவைக்கக் கோரி காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் லோக்சபாவில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்தார். இச்சம்பவம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா முறைப்படியான விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

## காவல் நிலையங்களில் சானிடரி நாப்கின் விநியோக இயந்திரம்: உயர்நீதிமன்றம் உத்தரவு!




புதுடெல்லி, ஆக. 06–

தில்லி முழுவதும் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் பணியாற்றும் பெண் காவலர்களுக்காக சானிட்டரி நாப்கின் விநியோக இயந்திரம் அமைக்கவும், அவர்களுக்கென தனிப்பட்ட கழிப்பறைகள் ஏற்படுத்தவும் காவல் துறைக்கு தில்லி உயர்நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது. தலைமை நீதிபதி டி.கே.உபாத்யாயா மற்றும் நீதிபதி தேஜஸ் காரியா அடங்கிய அமர்வு, தில்லி காவல் ஆணையர் 6 வாரங்களுக்குள் அனைத்து காவல் நிலையங்களிலும் பெண்களுக்கான தனி கழிப்பறைகள் மற்றும் சானிட்டரி நாப்கின் வசதிகள் உள்ளனவா என்பதை ஆய்வு செய்ய உத்தரவிட்டது. அந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், இந்த உத்தரவை நீதிமன்றம் வழங்கியது. இந்த வழக்கை செப்டம்பர் 23–ஆம் தேதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, நீதிமன்ற உத்தரவுகளை செயல்படுத்த எடுத்த நடவடிக்கைகள் குறித்து காவல் துறை தரப்பில் சத்தியப்பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யவும் நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. பெண் காவலர்களுக்கு பணியிடங்களில் அடிப்படை மாதவிடாய் சுகாதார வசதிகள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்கு தொடர்பாக மத்திய அரசு, தில்லி அரசு மற்றும் காவல் துறைக்கு நோட்டீஸ் அனுப்பிய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

'ஜஸ்டிஸ் ஃபார் ரைட்ஸ் ஃபவுண்டேஷன்' என்ற தன்னார்வ அமைப்பு தாக்கல் செய்த இந்த வழக்கில், ஆர்டிஐ தகவல்களை மேற்கோள் காட்டிய மனுதாரர், தில்லி முழுவதும் நூற்றுக்கணக்கான காவல் நிலையங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் பணியாற்றினாலும், சானிட்டரி நாப்கின் இயந்திரங்கள் சில இடங்களில் மட்டுமே உள்ளன என்றும், இந்த வசதிகளுக்கான பட்ஜெட் அல்லது கொள்கை முழுமையாக இல்லை யென்றும் தெரிவித்தார்.

இந்த குறைபாடு வெறும் நிர்வாக தவறாக மட்டுமே இல்லை. இவ்வாறான அடிப்படை வசதிகளை வழங்கத் தவறுவது, பெண்கள் காவலர்களின் கண்ணியம், ஆரோக்கியம், தனியுரிமை மற்றும் பாது காப்பான பணிநிலை களை மீறுகிறது. இது அரசமைப்பின் 14 மற்றும் 21–ஆவது கட்டளைகளுக்கு எதிரானது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டது.

## மதுபானம்; இனி ஆன்லைன் முன்பதிவு!



சென்னை, ஆக. 06–


தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் மதுபானங்களை வாங்க நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைக்கு மாற்றாக, இணைய வழியில் (ஆன்லைன்) முன்பதிவு செய்து நேரில் சென்று வாங்கும் வசதி வியாழக்கிழமை (ஆக.6) முதல் தொடங்கப்படவுள்ளது.

Tasmace2e.in என்ற இணையதளம் மூலம் மதுபானங்களை முன்பதிவு செய்து, சம்பந்தப்பட்ட டாஸ்மாக் கடைக்குச் சென்று பெற்றுக்கொள்ளும் நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் கீழ் தமிழகம் முழுவதும் செயல்படும் 4,000–க்கும் மேற்பட்ட டாஸ்மாக் மதுக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த கடைகளில் இருப்பில் உள்ள மதுபானங்கள், அவற்றின் அதிகபட்ச சில்லறை விலை (எம்ஆர்பி) என்பன உள்ளிட்ட விவரங்களை இந்த இணையதளம் மூலம் அறிந்துகொள்ளலாம். பயனாளர்கள் முதலில் இணையதளத்தில் உள்நுழைந்து தங்களின் வயது 21 அல்லது அதற்கு மேற்பட்டது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பின்னர், தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து 5 கி.மீ.அல்லது 20 கி.மீ. சுற்றளவில் உள்ள டாஸ்மாக் கடைகளை அல்லது மாவட்டம், கடை எண் உள்ளிட்ட விவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட கடையைத் தேர்வு செய்து, விருப்பமான மதுபானத்தை முன்பதிவு செய்யலாம். அதற்கான தொகையையும் இணையவழியிலேயே செலுத்த வேண்டும்.

பணம் செலுத்தப்பட்டதும் பயனாளருக்கு தனித்துவமான 'க்யூஆர்' குறியீடு உருவாக்கப்படும். அந்தக் குறியீட்டை தேர்வு செய்யப்பட்ட டாஸ்மாக் கடையில் காண்பித்தால், முன்பதிவு செய்யப்பட்ட மதுபானத்தை 'எம்ஆர்பி' விலையிலேயே பெற்றுக்கொள்ள முடியும். ஒருவர் சென்னையில் இருந்தபடியே திருநெல்வேலி அல்லது வேறு எந்த மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் கடையிலும் முன்பதிவு செய்ய முடியும். ஆனால், மதுபானத்தை நேரில் சென்று மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும். வீட்டுக்கு கொண்டு வந்து வழங்கும் வசதி தற்போது அறிமுகப்படுத்தப்படவில்லை.

இந்த இணையதளத்தில் மதுபான இருப்பு விவரங்கள் ஒவ்வொரு 30 நிமிஷங்களுக்கும் ஒருமுறை புதுப்பிக்கப்படும். முன்பதிவு செய்யப்பட்ட மதுபானம் குறிப்பிட்ட கடையில் இல்லாவிட்டால், செலுத்திய தொகை திருப்பி வழங்கப்படும் அல்லது வேறு டாஸ்மாக் கடையிலிருந்து அதே மதுபானத்தைப் பெறும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இணையதளம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் செயல்படுவதுடன், டாஸ்மாக் கடையின் இருப்பிடத்துக்கான வழிகாட்டி வசதியும் அதில் இடம்பெற்றுள்ளது. குறைந்த வயதுடையவர்கள்...: குறைந்த வயதுடையவர்கள் இந்த வசதியை தவறாகப் பயன்படுத்த வாய்ப்புள்ளதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.



## மகாலட்சுமி ராஜயோகம்: ஆகஸ்ட் 9 முதல் அதிர்ஷ்ட காலம்!




ஆகஸ்ட் 9–ம் தேதி மிதுன ராசியில் செவ்வாய் பகவானுடன் சந்திரன் இணைவதால், ஜோதிடத்தில் மிகவும் சிறப்பானதாக கருதப்படும் மகாலட்சுமி ராஜயோகம் உருவாகிறது. இந்த யோகம் உருவாகும் காலத்தில் சில ராசிக்காரர்களுக்கு பணவரவு, தொழில் வளர்ச்சி, சமூக மரியாதை மற்றும் புதிய வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று ஜோதிட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**மிதுன** ராசிக்காரர்களுக்கு இந்த யோகம் மிகவும் சாதகமாக அமையும். புதிய வேலை வாய்ப்புகள், பதவி உயர்வு, எதிர்பாராத வருமானம் மற்றும் செல்வாக்கு அதிகரிக்கும். முக்கியமான நபர்களின் அறிமுகம் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**கன்னி** ராசியினருக்கு அதிர்ஷ்டம் முழுமையாக கைகொடுக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். புதிய முதலீடுகள் மற்றும் வருமான வாய்ப்புகள் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், பணியிடத்தில் மரியாதையும் உயரும்.

**மகர** ராசிக்காரர்களுக்கு நிதிநிலை வலுப்பெறும். நீண்ட நாட்களாக இருந்த உடல்நலப் பிரச்சினைகள் குறையும். திருமணம், வீடு, குடும்ப விழாக்கள் போன்ற சுபகாரியங்கள் நடைபெற வாய்ப்புள்ளது. முயற்சிகளில் வெற்றி கிடைத்து, வாழ்க்கையில் நிலையான முன்னேற்றம் ஏற்படும்.

ஜோதிடக் கணிப்பின்படி, இந்த மகாலட்சுமி ராஜயோகம் பணம், புகழ் மற்றும் வெற்றிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கும் காலமாக கருதப்படுகிறது. இருப்பினும், இவை ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையில் கூறப்படும் பலன்கள் மட்டுமே; இதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தங்கம் விலை அதிரடியாக உயர்வு!



சென்னை, ஆக. 06–

சென்னையில், ஒரே நாளில் (ஆகஸ்ட் 06) ஆபரணத் தங்கத்தின் விலை ரூ.2,160 உயர்ந்து அதிர்ச்சி கொடுத்துள்ளது. இதனால், ஒரு சவரன் தங்கம் ரூ.1,10,000க்கு விற்பனையாகிறது. ஒரு கிராம் ரூ.270 உயர்ந்து ரூ.13,750க்கு விற்பனையாகி வருகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு 10 ரூபாய் அதிகரித்து 250 ரூபாய்க்கும், கிலோவுக்கு 10 ஆயிரம் ரூபாய் அதிகரித்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## நாடு முழுவதும் 50 லட்சம் வீடுகளில் சோலார் பேனல்கள் பொருத்தம்!



புதுடெல்லி, ஆக. 06–

'பி.எம். சூர்ய கர்: முப்த் பிஜிலி யோஜனா' திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 50 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளில் சோலார் பேனல்கள் பொருத்தப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் தொடங்கப்பட்ட 2 ஆண்டுகளில் இந்த மைல்கல் எட்டப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் வெறும் 7.94 லட்சம் வீடுகளில் மட்டுமே சோலார் பேனல்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது வேகம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. ரூ.75 ஆயிரத்து 21 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் இது, உலகின் மிகப்பெரிய கூரை சோலார் மின்சக்தி திட்டமாகும். தற்போது ஒவ்வொரு 6 நாட்களுக்கும் ஒரு லட்சம் வீடுகள் என்ற வேகத்தில் திட்டம் விரிவடைகிறது. கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 5.06 லட்சம் வீடுகள் பயன்பெற்றுள்ளன. நேரடி பணப்பரிமாற்றம் மூலம் பயனாளிகளுக்கு ரூ.28 ஆயிரத்து 24 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் 19 லட்சம் குடும்பங்கள் கட்டணமின்றி மின்சாரம் பெறுகின்றன. உபரி மின்சாரத்தை விற்றதன் மூலம் 12 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் 2025–ம் நிதியாண்டில் ரூ.421 கோடி வருமானம் ஈட்டியுள்ளன. இதுவரை மொத்தம் 14.8 ஜிகாவாட் சூரிய மின்சக்தி உருவாக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறினர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ரத்தசோகை வராமல் இருக்க... இந்த 5 உணவுகளை தவறாமல் சேருங்கள்!




உடலில் இரும்புச்சத்து குறைவாக இருந்தால் ரத்தசோகை, சோர்வு, தலைச்சுற்றல், பலவீனம், மூச்சுத்திணறல் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். பலர் கீரை, பேரீச்சம்பழம் மட்டுமே இரும்புச்சத்து நிறைந்த உணவுகள் என நினைப்பது தவறு. ஊட்டச்சத்து நிபுணர்கள், இதற்கு மாற்றாக மேலும் பல சத்தான உணவுகளை தினசரி உணவில் சேர்க்க வேண்டும் என அறிவுறுத்துகின்றனர்.

பயறு வகைகள் (துவரம் பருப்பு, பாசிப்பயறு, கொள்ளு, காராமணி) இரும்புச்சத்து மற்றும் புரதம் நிறைந்தவை. சியா விதைகள் இரும்புச்சத்து, நார்ச்சத்து அதிகம் கொண்டதால் ரத்தசோகையைத் தடுக்கவும் செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன. முந்திரி உடலுக்கு தேவையான இரும்புச்சத்து மற்றும் நல்ல கொழுப்பை வழங்குகிறது. கொண்டைக்கடலை ஹீமோகுளோபின் அளவை உயர்த்தி உடல் வலிமையை அதிகரிக்க உதவுகிறது. பூசணி விதைகள் இரும்புச்சத்து, மெக்னீசியம், துத்தநாகம் உள்ளிட்ட முக்கிய சத்துக்களை வழங்குகின்றன.

மேலும், இரும்புச்சத்து நிறைந்த உணவுகளுடன் எலுமிச்சை, ஆரஞ்சு, நெல்லிக்காய் போன்ற வைட்டமின் C நிறைந்த பழங்களை சேர்த்து சாப்பிட்டால், இரும்புச்சத்து உடலில் நன்றாக உறிஞ்சப்படும். தொடர்ந்து சோர்வு அல்லது ரத்தசோகை அறிகுறிகள் இருந்தால், சுயமாக மருந்து எடுத்துக்கொள்ளாமல் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது அவசியம். உடல்நலத்தை பாதுகாக்க சத்தான உணவுப் பழக்கமே சிறந்த தீர்வாகும்.

## பழனியில் ஹோட்டல்கள் ரெஸ்டாரண்ட் அசோசியேசன் சங்க கூட்டம்!




பழனி, ஆகஸ்ட். 6–

பழனியில் ஹோட்டல் ரெஸ்டாரண்ட் அசோசியேஷன் சங்க கூட்டம் தலைவர் என் ஹரிஹர முத்து தலைமையில் நடைபெற்றது. இதில் வரி விதிப்பை குறைக்க வேண்டும். புதிய உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும். குப்பை வரிகளை தவிர்க்க வேண்டும். உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் சங்க துணை தலைவர் சரவணபவன் ஹோட்டல் நாதன், மக்கள் தொடர்பு அதிகாரி மயூரா கிருஷ்ணன், ராயல் ரவி, செயலாளர் பட்டையா ஹோட்டல் சேகர்பாபு, பொருளாளர வி பி எஸ் கிராண்ட் அதிபர் பெரியசாமி ஆகியோர் பங்கேற்றனர்

## பிரபல யூடியூபர் சவுக்கு சங்கரின் 13 வயது மகன் தூக்குப்போட்டு தற்கொலை!

மரக்காணம், ஆக. 06–

சென்னையை சேர்ந்த பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர். இவரது மனைவி ஆர்த்தி, சென்னை ஐகோர்ட்டில் வக்கீலாக பணியாற்றி வருகிறார். இவர்களுடைய மகன் தியோ ஆழிசை (வயது 13). கருத்துவேறுபாடு காரணமாக சவுக்கு சங்கரும், ஆர்த்தியும் தனித்தனியாக வசித்து வருவதாக கூறப்படுகிறது.



விழுப்புரம் மாவட்டம் நடுக்குப்பத்தில் ஆர்த்தியின் பெற்றோர் உள்ளனர். அங்கு தாத்தா செந்தாமரைக் கண்ணன் மற்றும் பாட்டி கவனிப்பில் இருந்து சிறுவன் தியோ ஆழிசை, மரக்காணம் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 8–ம் வகுப்பு படித்து வந்தான். தாய் மீதான ஏக்கத்தில் கடந்த சில நாட்களாக சிறுவன் சோகமாக இருந்துள்ளான். எனவே தாயார் ஆர்த்தியை பார்ப்பதற்காக சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு சில நாட்கள் இருந்த நிலையில், நேற்று முன்தினம் சிறுவன் தியோ ஆழிசை நடுக்குப்பம் கிராமத்துக்கு அழைத்து வரப்பட்டான்.

நேற்று காலை வழக்கம்போல் பள்ளிக்கு கிளம்புமாறு பேரனிடம் தாத்தா, பாட்டி கூறிவிட்டு மற்ற வேலைகளை கவனித்தனர். வீட்டின் பின்பக்கம் சென்ற சிறுவன் நீண்ட நேரமாகியும் வரவில்லை. சந்தேகமடைந்த தாத்தா, பாட்டி பின்பக்கம் சென்று பார்த்தபோது, அங்குள்ள வேப்ப மரத்தில் சிறுவன் தியோ ஆழிசை தூக்கில் தொங்கியவாறு இருந்தான்.

இதைபார்த்து அதிர்ச்சி அடைந்த அவர்கள், சிறுவனை மீட்டு மரக்காணம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள், ஏற்கனவே தியோ ஆழிசை இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். பள்ளிக்கு செல்ல விருப்பமில்லாமல் சிறுவன் தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

# 135 ஆண்டுகள் பழைய வங்கி சட்டம் அவுட்!




புதுடெல்லி, ஆக. 06–

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் 1891–ல் கொண்டுவரப்பட்ட 'பேங்கர்ஸ் புக்ஸ் எவிடென்ஸ் சட்டம்' 135 ஆண்டுகளுக்கு பிறகு மாற்றப்பட்டுள்ளது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த பேங்கர்ஸ் புக்ஸ் எவிடென்ஸ் மசோதா, 2026 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய சட்டத்தின்படி, டிஜிட்டல், மின்னணு, கிளவுட் மற்றும் விர்ச்சுவல் வங்கி ஆவணங்களும் இனி நீதிமன்றங்களில் சட்டபூர்வ ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படும். இதுவரை வங்கிகள் சான்றளித்த காகித ஆவணங்களுக்கு மட்டுமே சட்ட அங்கீகாரம் இருந்தது.

இந்த மாற்றம் பொதுமக்களின் தினசரி வங்கி சேவைகளில் மாற்றம் ஏற்படுத்தாது. ஆனால் ஆன்லைன் பணப்பரிமாற்றம், மோசடி உள்ளிட்ட வங்கி தொடர்பான வழக்குகளில் டிஜிட்டல் ஆவணங்களை எளிதாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வழிவகுக்கும்.

# தமிழக மீனவர்கள் 8 பேர் இலங்கை கடற்படையினரால் கைது!



ராமேஸ்வரம், ஆக. 06–

எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாகக் கூறிய தமிழக மீனவர்கள் 8 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராமேசுவரம் மற்றும் மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த 8 மீனவர்கள் தனித்தனியே இரண்டு படகுகளில் புதன்கிழமை மீன்பிடிக்க கடலுக்குள் சென்றுள்ளனர்.

இவர்கள் 8 பேரும் கச்சத்தீவு அருகே பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக வியாழக்கிழமை அதிகாலை கைது செய்துள்ளனர்.

மேலும், அவர்களது விசைப்படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்துள்ளனர். கைதான மீனவர்கள் 8 பேரையும் விசாரணைக்கு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருவது தமிழக மீனவர்களிடையே பெரும் அச்சத்தையும் சோக த்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்குமாறு அவர்களின் குடும்பத்தினரும் மீனவ அமைப்புகளும் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளன.

# 'ஏசி' பெட்டிகளில், பயணிக்கும் ஆர்.ஏ.சி., பயணியருக்கும் கட்டாயம் போர்வை, கம்பளி!




சென்னை, ஆக. 06–

விரைவு ரயில்களில், டிக்கெட் உறுதியான பயணியருக்கு மட்டுமே போர்வை, கம்பளி, தலையணை வழங்கப்படுகின்றன. 'ஏசி' பெட்டிகளில் உட்கார்ந்து செல்ல மட்டும் அனுமதிக்கப்படும் ஆர்.ஏ.சி., பயணியருக்கு போர்வை, கம்பளி வழங்கப்படுவதில்லை. இதனால், பயணியர் அவதிப்படுகின்றனர். விரைவு ரயிலில்பயணிக்கும் ஆர்.ஏ.சி., பயணியருக்கும் போர்வை, கம்பளி, தலை யணை வழங்க வேண்டும் என, ரயில்வே வாரியம் ஏற்கனவே உத்தரவிட்டு ள்ளது. இருப்பினும், இந்த உத்தரவு பின்பற்றப்படுவதி ல்லை என, பயணியரிடம் புகார்கள் வந்தன. இதை யடுத்து, விரைவு ரயில்களில், 'ஏசி' பெட்டிகளில், ஆர்.ஏ.சி., பயணியருக்கும் கட்டாயம் போர்வை மற்றும் தலையணை வழங்க வேண்டும். இதை அனைத்து மண்டல பொதுமேலாளர்களும் உறுதி செய்ய வேண்டும் என, ரயில்வே வாரியம் உத்தரவிட்டுள்ளது.

ரயில்வே தொழிற் சங்க முன்னாள் நிர்வாகி மனோகரன் கூறுகையில், "போர்வை, கம்பளிகள், தலையணை பற்றாக்குறை காரணமாக, ரயில்வே ஒப்பந்த ஊழியர்கள், ஆர்.ஏ.சி., பயணியருக்கு கொடுக்க மறுக்கின்றனர். "முழு கட்டணமும் கொடு த்து விட்டு, உட்கார்ந்து செல்லும் பயணியரின் நிலை மோசமானது. இந்த விவகாரத்தில் ரயில்வேயின் புது உத்தரவு வரவேற்கத க்கது." என்றார்.

# எலான் மஸ்க் நிறுவன ராக்கெட் நிலவின் மேல்பரப்பில் மோதியது; 10 அடி உயரத்திற்கு மேலே எழும்பிய தூசி!



அபுதாபி, ஆக. 06–

எலான் மஸ்க் நிறுவனத்தின் பால்கன்–9 ராக்கெட் நிலவின் மேல்பரப்பில் மோதியது. இந்த நிகழ்வை அமீரகத்தின் வானியல் மையம் கண்காணித்து எடுத்த புகைப்படம் தூசிப்படலம் காரணமாக தெளிவில்லாமல் உள்ளது.

இதுகுறித்து அபுதாபி வானியல் மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கடந்த 2025–ம் ஆண்டு பயர்பிளை ஏரோஸ்பேஸ் என்ற நிறுவனத்தின் நிலவு பயண லேண் டர் வாகனங்களை ஸ்பேஸ்–எக்ஸ் என்ற எலான் மஸ்க் நிறுவனத்தின் பால்கன்–9 ராக்கெட் சுமந்து சென்றது. அதன் பிறகு நிலவுக்கான லேண்டர்களை அதன் பாதைக்கு சேர்த்தபிறகு புவி மற்றும் நிலவு ஈர்ப்பு விசை காரணமாக நீண்ட சுற்றுப்பாதையில் வந்து கொண்டு இருந் தது. அந்த ஆண்டின் ஜனவரியில் விண்வெளிக்கு சென்ற ராக்கெட்டின் 2–ம் கட்ட பாகம் தொடர்ந்து அங்கேயே மிதந்து கொண்டு இருந்தது.

சுமார் 4 ஆயிரம் கிலோ எடையுள்ள, ஒரு பஸ் அளவு பருமன் கொண்ட இந்த ராக்கெட் பாகமானது மணிக்கு 8 ஆயிரத்து 690 கி.மீ. வேகத்தில் கட்டுப்பாடு இல்லாமல் நிலவை நோக்கி சென்றது. அதில் அமீரக நேரப்படி நேற்று காலை 10.30 மணியளவில் நிலவின் மீது மோதும் என அபுதாபி அல் கதம் வானியல் மையம் கணக்கிட்டது. அதேபோல் சரியாக அதேநேரத்தில் நிலவின் மேல் விளிம்பில் உள்ள ஐன்ஸ்டீன் கிரேட்டர் என்ற பகுதியில் பயங் கரமாக மோதியது. இந்த மோதல் திட்டமிடப்படாத ஒன்று என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலவில் ராக்கெட் மோதும் நிகழ்வை அபுதாபி அல் கதம் வானியல் மையம் தொடர்ந்து கண் காணித்து வந்தது. பகலில் வெளிச்சம் மற்றும் நிலவு அடிவானத்தில் மிக குறைந்த உயரத் தில் இருந்ததாலும், வெளிமண்டல ஒளி விலகல் காரணமாக புகைப்படம் எடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. மோதல் நடப்பதற்கு ஒரு நிமிடத்திற்கு முன் முதன்மை தொலைநோக்கி மூலம் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. இருந்தாலும் மோதலின்போது பெரும் புழுதி காரணமாக அதன் வெடிப்பு மற்றும் வெளிச்சத்தை பதிவு செய்ய முடியவில்லை. தூசிப்படலம் அதிகமாக வானில் இருந்ததால் தெளிவான புகைப்படங்களை எடுக்க முடியவில்லை.

அப்போது நிலவின் நிலப்பரப்பை ராக்கெட் மோதும்போது சுமார் 1.100 டன் எடையுள்ள நிலவு பாறைகள் மற்றும் மண் தூசியாக விண்ணில் கிளம்பி இருக்கலாம் என கருதப்படுகிறது. நிலவின் குறைந்த புவியீர்ப்பு விசை காரணமாக இந்த தூசிகள் சுமார் 10 அடி உயரம் வரை மேலே எழும்பி இருக்கலாம் என தெரிகிறது. உலகம் முழுவதிலும் இதன் மோதல் புகைப்படங்களை வைத்து பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை குறைக்கப்பட்டுள்ளதா?







சென்னை, ஆக. 06–

மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை குறைக்கப்பட்டுள்ளதாக பரப்பப்படும் தவறான தகவல் பரவி வருவதாக தகவல் நம்பகத்தன்மை பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அப்பிரிவு வெளி யிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;– ஏற்கனவே ரூ.8,000–ஆக உள்ள மீன்பிடி தடைக்கால நிவாரணம், ரூ.7,000–ஆக தமிழ்நாடு அரசு குறைத்திரு ப்பதாக சமூக வலைதளங்க ளில் தவறான தகவல் பரவி வருகிறது. இது முற்றிலும் தவறான தகவல்.

மீனவர்களுக்கான மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை (Ban Period Assistance) ரூ.8,000 தொடர்ந்து தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2026 – 2027 பட்ஜெட்டில் வடகிழக்கு பருவமழை காலங்களில் மீனவ குடும்ப ங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகை (Lean Period Fishing Assistance) ரூ.6,000–லிருந்து ரூ.7,000–ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு: 1518 பயிற்சி பணியிடங்கள்... TNSTC–யில்!




நிறுவனம்: தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகம் (TNSTC)
பணி வகை: Apprentice (ஒரு ஆண்டு பயிற்சி)
காலியிடங்கள்: 1518
பணியிடங்கள்: Graduate Apprentice (Engineering & Non–Engineering), Diploma Technician Apprentice
பணியிடம்: தமிழ்நாடு முழுவதும்
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
https://nats.education.gov.in/
விண்ணப்பம் தொடக்கம்: 28.07.2026
கடைசி தேதி: 28.08.2026
விண்ணப்பிக்க: NATS Apprenticeship Portal

## அமெரிக்கா விசா ஷாக்..!

## இந்திய மாணவர்களுக்கு F-1 விசா 62% சரிவு




வாஷிங்டன், ஆக. 06–

அமெரிக்காவில் உயர்கல்விக்காக விண்ணப்பித்த இந்திய மாணவர்களுக்கு F–1 விசா வழங்குவது கடுமையாக குறைந்துள்ளது. ஜூன்ஜூலை சேர்க்கை காலத்தில் விசா வழங்கல் 62% வரை சரிந்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

2024–ல் இதே காலத்தில் 58,000–க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் விசா பெற்ற நிலையில், தற்போது அது 22,000 ஆக குறைந்துள்ளது. சமூக வலைதள பின்னணி ஆய்வு, கடுமையான பாதுகாப்பு சோதனைகள், தாமதமான நேர்காணல்கள் மற்றும் புதிய குடியேற்றக் கொள்கைகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது..

# பகுஜன் சமாஜ் கட்சியின் ஒரே எம்.எல்.ஏ. காலமானார்!!



உத்தரபிரதேசம், ஆக. 06–

உத்தரப் பிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் உமா சங்கர் சிங், உடல்நலக் குறைவால் புதன்கிழமை காலமானார். கடந்த 2022 உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில், பகுஜன் சமாஜ் கட்சியிலிருந்து உமா சங்கர் சிங் மட்டுமே வெற்றி பெற்றார். இந்த நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட உமா சங்கர் சிங் (வயது 55) நீண்டகாலமாக வெளிநாட்டில் சிகிச்சையில் இருந்த நிலையில், புதன்கிழமை சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

உத்தரப் பிரதேசத்தின் கிழக்கு மாவட்டங்களில் பகுஜன் சமாஜ் கட்சியின் முகமாக திகழ்ந்த உமா சங்கர் சிங், 2012 முதல் எம்.எல்.ஏ.வாக இருந்து வருகிறார்.

கடந்த 2022 சட்டப்பேரவைத் தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் தோல்வியைச் சந்தித்த நிலையில், உமா சங்கர் மட்டும் 6,583 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.


உத்தரப் பிரதேச மாநிலம், லக்னௌவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட அவரது உடலுக்கு பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதி உள்பட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# அமித்ஷா தமிழகம் வருகை!

புதுச்சேரி, ஆக. 06–

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆக. 8–ல் தமிழகம் மற்றும் புதுச்சேரி வருகிறார்.

புதுச்சேரி போலீஸ் துறைக்கு, ஜனாதிபதி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த விருதினை வழங்க, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆக. 8–ல் புதுச்சேரி வருகிறார். இதற்காக, டெல்லியில் இருந்து சென்னை விமான நிலையம் வரும் அவர், ஹெலிகாப்டர் வாயிலாக புதுச்சேரி செல்கிறார்.

புதுச்சேரி கடற்கரையை யொட்டி உள்ள நீதிபதிகள் விருந்தினர் மாளிகையில் அன்று இரவு தங்குகிறார். அதன்பின், 9ம் தேதி காலை, 8:10 மணிக்கு புதுச்சேரி கோரிமேடு போலீஸ் மைதானத்தில் நடக்கும் விழாவில், போலீசாருக்கு ஜனாதிபதி விருதை அமித் ஷா வழங்குகிறார்.

அந்த விழாவிற்கு பின், காலை 10:50 மணிக்கு ஹெலிகாப்டர் வாயிலாக திருவண்ணாமலை சென்று, கோவிலில் தரிசனம் செய்கிறார். ரமணர் ஆசிரமத்துக்கும் செல்கிறார். பின், அங்கிருந்து ஹெலிகாப்டரில் சென்னை வந்து, அங்கிருந்து விமானம் மூலம் டெல்லி செல்கிறார்.





கொழும்பில் இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயகவை புதன்கிழமை சந்தித்த இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் விக்ரம் மிஸ்ரி.

# சிறையில் அடைத்தாலும் பரவாயில்லை; டிசம்பரில் வங்காளதேசம் செல்வேன் - ஷேக் ஹசீனா!

புதுடெல்லி, ஆக. 06–

வங்காளதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, டிசம்பர் மாதம் தாயகம் திரும்ப இருப்பதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேற்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், தன்னை சிறையில் அடைத்தாலும் பரவாவில்லை என்றும் சிறை தண்டனை அல்லது மரண தண்டனையை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும், ஜனநாயகம் மற்றும் நீதியை நிலைநாட்டவே திரும்புவதாகவும் அவர் கூறினார்.



வங்காளதேசத்தில் தற்போது சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அவரது மகன் சாஜிப் வாசித் ஜாய் குற்றம் சாட்டியுள்ளார். இந்த போராட்டங்கள் அமைதியான மாணவர் இயக்கம் அல்ல என்றும், திட்டமிட்ட வன்முறை என்றும் ஹசீனா தெரிவித்தார். வங்காளதேச நிலைமை கவலையளிப்பதாகவும், சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# ‘முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை தமிழக அரசு உயர்த்தினால் சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்வோம்’ - கேரளா எச்சரிக்கை!

திருவனந்தபுரம், ஆக. 06–

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள 131 ஆண்டுகள் பழமையான முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாக தமிழக அரசு தனது பட்ஜெட்டில் நேற்று அறிவித்தது. இதற்கு கேரள மாநிலத்தின் தரப்பில் இருந்து எதிர்ப்புகள் வரத் தொடங்கியுள்ளன. இது குறித்து கேரள அரசின் நீர்வளத்துறை மந்திரி மான்ஸ் ஜோசப் செய்தியாளர்களிடம் கூறியதாவது;–



“முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை எந்த சூழலிலும் 142 அடிக்கு மேல் உயர்த்தக்கூடாது என்ற நிலைப்பாட்டில் கேரள அரசு உறுதியாக உள்ளது. அணையின் நீர்மட்டத்தை 142 அடிக்கு மேல் உயர்த்த கேரளா ஒருபோதும் அனுமதிக்காது. முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த மிகுந்த கவலைக்குரிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் முல்லைப் பெரியாறு அணையில் விரிவான பாதுகாப்பு ஆய்வை மேற்கொள்ள வேண்டும். அந்த ஆய்வு டிசம்பர் 31–ந்தேதிக்கு முன்பே நடந்திருக்க வேண்டும். இருப்பினும், இதுவரை ஒரு அடிப்படை பாதுகாப்பு தணிக்கை கூட நடத்தப்படவில்லை.

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்ட பாதுகாப்பு ஆய்வு மற்றும் பலப்படுத்தும் நடவடிக்கைகள் கூட இன்னும் முழுமையடையாத நிலையில், தமிழக அரசு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

இரு மாநிலங்களுக்கும் ஏற்புடைய நிலைப்பாடுகளை சுப்ரீம் கோர்ட்டு பரிசீலித்து, இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே கேரளாவின் நிலைப்பாடு. தமிழக அரசு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த முயற்சித்தால், கேரளா சுப்ரீம் கோர்ட்டை நாடும். கேரளாவின் நலன்களை மாநில அரசு உறுதியாகப் பாதுகாக்கும்.

முல்லைப் பெரியாறில் புதிய அணையைக் கட்டுவதே எங்களின் அடிப்படைத் கோரிக்கையாக தொடர்ந்து வருகிறது. கேரள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், தமிழ்நாட்டிற்குத் தேவையான நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், பரஸ்பர உடன்பாட்டின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதுவே மாநிலத்தின் நிலையான நிலைப்பாடாகும்.

தமிழ்நாடு–கேரளா இடையிலான உறவில், கடந்த 10 ஆண்டுகளில் எதுவும் நடக்க வில்லை. அந்த காலகட்டத்தில் ஏதேனும் முக்கிய முடிவு கூட எடுக்கப்படவில்லை. உறவுகள் இருந்திருக்கலாம், ஆனால் நடைமுறையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# புது ரூட்.. ஹார்முஸ் ஜலசந்தி போக்குவரத்தை மீட்டெடுக்க ஓமனுடன் ஈரான் ஒப்பந்தம்.. முக்கியத்துவம் என்ன?

வாஷிங்டன், ஆக. 06–



மத்திய கிழக்கில் அமெரிக்கா ஈரானுக்கு இடையே போர் தீவிரமடைந்துள்ள நிலையில், உலகின் மிக முக்கியமான எரிபொருள் வர்த்தகப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியில் பதற்றம் நிலவுகிறது.

உலகளவில் கச்சா எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவில் 20% ஹார்முஸ் ஜலசந்தி வழியேதான் கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில் ஹார்முஸ் வழியே சரக்கு கப்பல்களை மீண்டும் இயக்குவது தொடர்பாக ஓமன் மற்றும் ஈரான் இடையே முக்கிய உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இத்தகவலை ஈரானிய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாயி உறுதிப்படுத்தியுள்ளார்.

வங்கதேசத்தில் பாகிஸ்தான் ISI–யின் ஆதிக்கம்.. பயங்கரவாதிகள் சுதந்திரமாக திரிகின்றனர் – ஷேக் ஹசீனா மகன்

வளைகுடாவிற்குள் செல்ல ஓமன் எல்லையிலும், வெளியேற ஈரான் எல்லையிலும் ஹார்முஸ் ஜலசந்தியில் வழக்கமாக இரண்டு தனித்தனிப் பாதைகள் பயன்படுத்தப்படும்.

தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய ஒப்பந்தத்தின்படி, இருவழிப் பாதைகளுக்குப் பதிலாக ஈரானிய பிராந்தியக் கடலுக்குள் அமைக்கப்பட்ட ஒரு ஒற்றைப் பாதை மட்டுமே பயன்படுத்தப்படும். 2 முதல் 4 மாதங்கள் வரையிலான காலத்திற்கு தற்காலிகமாக பயன்படுத்தப்படும் இந்தப் பாதையின் துல்லியமான புவியியல் எல்லைகளை இரு நாடுகளும் இறுதி செய்துள்ளன.

இப்புதிய ஒப்பந்தத்தின் கீழ், பாரசீக வளைகுடாவிற்குள் நுழையும் வர்த்தகக் கப்பல்களைப் பரிசோதிக்கும் மற்றும் கண்காணிக்கும் அதிகாரம் ஈரானுக்குக் கிடைக்கும் எனத் தெரிகிறது.

ஓமனுடன் உடன்பாடு எட்டப்பட்டாலும், ஈரானிய துறைமுகங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள கடற்படை முற்றுகை திரும்பப் பெறப்படாத வரை, இந்த வழியில் கப்பல்களுக்கு முழுமையான பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது என ஈரான் எச்சரித்துள்ளது. ஹார்முஸை கடந்து செல்லும் சரக்குக் கப்பல்களின் மதிப்பில் 5% முதல் 7% வரை சேவை மற்றும் பாதுகாப்புக்கான கட்டணமாக வசூலிப்போம் என ஈரான் கூறுகிறது.

ஓமன் தரப்பில் 3% கட்டணம் விதிக்கப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வரும் வேளையில், அமெரிக்கா எந்தவொரு கட்டணமும் விதிக்கப்படக் கூடாது எனத் தெரிவித்து வருகிறது.

அமெரிக்க அதிபர் டிரம்ப், “ஹார்முஸ் ஜலசந்தி விரைவில் திறக்கப்பட வேண்டும்; இல்லையெனில் ஈரான் மீது மிகக் கடுமையான தாக்குதல்கள் நடத்தப்படும்” என எச்சரித்துள்ளார். அதேசமயம், தாங்கள் அமெரிக்காவுடன் நேரடியாக எந்தப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை என்றும், ஓமனுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

ஹார்முஸ் என்பது சுமார் 21 நாட்டிக்கல் மைல்கள் அகலம் கொண்ட மிகக் குறுகிய கடற்பகுதியாகும். சர்வதேசக் கடல் சட்டங்களின்படி, இதன் ஒரு பகுதி ஈரானிய எல்லைக்குள்ளும், மறுபகுதி ஓமனின் எல்லைக்குள்ளும் வருகின்றன. எனவே, ஒரு புதிய கடல்வழிப் பாதையை உருவாக்கவோ அல்லது போக்குவரத்தைச் சீரமைக்கவோ ஈரானுக்கு ஓமனின் ஒத்துழைப்பு அத்தியாவசியம். அரபு நாடுகளிலேயே ஓமன் மட்டுமே எந்தப் பக்கமும் சாராத நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது.

ஈரான் நேரடியாக அமெரிக்காவுடனோ அல்லது பிற மேற்கத்திய நாடுகளுடனோ பேச விரும்பாத போது, ஓமன் மூலமாகவே அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன.

# செவிலியர்கள் போராட்டம்: 3 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தல்!



திண்டுக்கல், ஆக. 06–

தமிழகம் முழுவதும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகள் முன்பு செவிலியர்கள் 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், அரசாணை 204–ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும், ஒப்பந்த செவிலியர்களை நிரந்தரப் பணியில் அமர்த்தி காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றும் செவிலியர்களுக்கு நர்சிங் ஆபிசர் பதவி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

தென் மண்டல செயலாளர் ஜோதி தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில், மருத்துவமனைகளில் ஏற்கனவே செவிலியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், தற்போது பணியாற்றும் செவிலியர்களை வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கு மாற்றும் அரசின் உத்தரவை திரும்பப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்தகட்ட போராட்டம் குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் எச்சரித்தனர்.

# மின்சார வாகனங்கள் பதிவில் தமிழகத்துக்கு 4-வது இடம்!

சென்னை, ஆக. 06–




சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க மத்திய–மாநில அரசுகள் பல்வேறு சலுகைகள், ஊக் கத் தொகைகளை அளித்து வருகின்றன. இதனால் பதிவு செய்யப்படும் மின்சார வாகனங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது. பிரதான சாலைகளில் பச்சை நிற ‘நம்பர் பிளேட்’ உடன் சத்தமே இல்லா மல் சீறிப்பாய்ந்து செல்லும் மின்சார வாகனங்களை இப்போது பரவலாக பார்க்க முடிகிறது.

கடந்த ஜூலை மாதம் நாடு முழுவதும் 3 லட்சத்து 7 ஆயிரத்து 752 மின் சார வாகனங்கள் பதிவாகி யுள்ளன. இதில், அதிகபட்சமாக உத்தரபிரதே சத்தில் 47 ஆயிரத்து 62 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தபடியாக மராட்டியத்தில் 36 ஆயிரத்து 642, கர்நாடகாவில் 29 ஆயிரத்து 183, தமிழகத்தில் 29 ஆயிரத்து 34, மத்தியபிரதேசத்தில் 19 ஆயிரத்து 133, ராஜஸ்தானில் 17 ஆயிரத்து 79, பீகாரில் 16 ஆயிரத்து 80, மேற்கு வங்காளத்தில் 15 ஆயிரத்து 569, கேரளாவில் 13 ஆயிரத்து 671, குஜராத்தில் 13 ஆயிரத்து 443 வாகனங்கள் பதிவாகியிருக்கின்றன. மின்சார வாகனங்களின் பயன்பாட்டினை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு–தனியார் கூட்டாண்மையில் அடுத்த 5 ஆண்டுகளில் மின்சார வாகனங்களுக்கான 20 ஆயிரம் பொது சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும், இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.50 கோடி பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அறிவித்துள்ளது. இதேபோல அடுக்குமாடி குடியிருப்போர் நலச்சங்கங்களின் மூலம் குடியிருப்புகளில் அமைக்கப்படும் மின் வாகன சார்ஜிங் நிலையங்களுக்கு அரசு மானியம் வழங்கும் என்றும் அறிவித்துள்ளதோடு, இதற்காக ரூ.5 கோடியும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

கடந்த மாதம் அதிக மின்சார வாகனங்கள் பதிவாகிய முதல் 10 மாநிலங்களில் 3–வது இடத்தில் உள்ள கர்நாடகத்துக்கும், 4–வது இடத்தில் உள்ள தமிழகத்துக்கும் இடையேயான வித்தியாசம் 149 மட்டும்தான். முதல்–அமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக அரசு மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளால் மின்சார வாகனங்கள் பதிவாகியதில் தமிழகம் அடுத்தடுத்து முன்னேறி செல்லும் என்று மின்சார வாகன தொழில் நிபுணர்கள் நம் பிக்கை தெரிவித்துள்ளனர்.

# சினிமா துளிகள்..!

## அஜித் டு கார்த்திக் சுப்புராஜ்; களைகட்டும் கோலிவுட் புதிய அறிவிப்புகள்!




கடந்த மூன்று நாட்களாகத் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு அடுத்தடுத்த அப்டேட்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. எதிர்பார்க்கப்பட்ட படங்களின் ரிலீஸ் தேதி அறிவிப்பு, புதிய படங்களின் அறிவிப்பு எனப் பல அப்டேட்கள் அடுத்தடுத்து வெளியாகின்றன. அந்த அப்டேட்களையெல்லாம் இங்கு பார்ப்போமா...

**கார்த்தி – மோகன் ராஜா படம்:**

இயக்குநர் மோகன் ராஜாவுக்குச் சினிமாவில் இது 25–வது ஆண்டு. இந்த ஸ்பெஷல் தருணத்தில் நடிகர் கார்த்தியுடன் ஒரு புதிய படத்திற்குச் கை கோத்திருக்கிறார் மோகன் ராஜா. கார்த்தியின் 31–வது படத்தை இவர் இயக்கவிருக்கிறார். பிரின்ஸ் பிக்சர்ஸ் சார்பில் லட்சுமண் குமார் இந்தப் படத்தை தயாரிக்கிறார். படத்தின் மற்ற விவரங்கள் அடுத்தடுத்து வெளியாகும் எனவும் கூறியிருக்கிறார்கள்.

**அஜித் அப்டேட்கள்:**

இந்த வாரம் அஜித் ரசிகர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான். ஆம், அஜித் நடிக்கும் இரண்டு படங்களின் அப்டேட்கள் இந்த வாரம் வெளிவந்திருக்கின்றன. ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில், அனிருத் இசையில் அஜித்குமார் நடிக்கவிருக்கும் ‘டார்டெவில்’ படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு டைட்டிலோடு வெளியாகியிருக்கிறது. இந்தப் படத்தின் மூலம் அஜித்குமாரின் மனைவி ஷாலினி அஜித்குமார் தயாரிப்பாளராக அறிமுகமாகிறார்.

பிறகு, இயக்குநர் விஜய் இயக்கத்தில் உருவாகி வரும், அஜித்தின் ரேஸிங் பற்றிய ஆவணப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கையும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆவணப்படத்திற்கு ‘கிளாடியேட்டர்ஸ் – இன் பர்ஷூட் ஆஃப் சேலஞ்சஸ்’ எனப் பெயரிட்டிருக்கிறார்கள். இந்த ஆவணப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்திருக்கிறார். ரசிகர்களுக்காக இதனைத் தியேட்டர் ரிலீஸாகக் கொண்டு வருகிறார்கள்.

**ஜீவாவின் ‘தகப்பன்’:**

‘தலைவர் தம்பி தலைமையில்’ படத்தின் வெற்றிக்குப் பிறகு ஜீவா, இயக்குநர் ரா. வெங்கட் இயக்கத்தில் நடித்து வருகிறார். இவர் ‘கிடா’ படத்தை இயக்கியவர். ‘மாமன்’, ‘கருடன்’ போன்ற படங்களைத் தயாரித்த லார்க் ஸ்டுடியோஸ் நிறுவனம் இந்தப் படத்தை தயாரிக்கிறது. இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்ட படக்குழு, இந்தப் படம் இந்தாண்டு டிசம்பரில் வெளியாகும் எனவும் அறிவித்திருக்கிறது.

**‘ஒன்ஸ் மோர்’ ரிலீஸ்:**

அறிமுக இயக்குநர் விக்னேஷ் ஸ்ரீகாந்த் இயக்கத்தில், அர்ஜுன் தாஸ், அதிதி ஷங்கர் நடிப்பில் உருவாகியிருக்கும் ‘ஒன்ஸ் மோர்’ படத்தின் அறிவிப்பு கடந்த 2024–ம் ஆண்டே வெளிவந்திருந்தது. படத்தின் பாடல்களும் வெளியாகி, எதிர்பார்ப்பையும் உருவாக்கியிருந்தன. அப்போதே, படம் 2025–ம் ஆண்டு பிப்ரவரியில் வெளியாகும் என அறிவித்திருந்தனர். ஆனால், அப்போது ரிலீஸ் மாற்றப்பட்டது. இடைவெளிக்குப் பிறகு இப்போது படத்தை ரிலீஸுக்குத் தயார் செய்திருக்கிறார்கள். இம்மாதம் 28–ம் தேதி படம் திரையரங்குகளில் வெளியாகிறது.

**மூடர்கூடம் 2:**

இயக்குநர் நவீன் இயக்கத்தில் ‘மூடர்கூடம்’ திரைப்படம், கடந்த 2013–ம் ஆண்டு வெளியாகி, நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. அப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அப்படத்தின் இரண்டாம் பாகத்தை 13 வருடங்களுக்குப் பிறகு தொடங்கியிருக்கிறார்கள். முதல் பாகத்தில் நடித்திருந்த நடிகர்களே, நவீன் இயக்கும் இந்த இரண்டாம் பாகத்திலும் நடிக்கவிருக்கிறார்கள்.

## சந்தீப் கிஷனின் ‘கரிகாலா’ மிரட்டலான ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு!

தெலுங்கு, தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் உருவாகி வரும் ‘கரிகாலா’, தலைமுறைகளை கவர்ந்த சந்தமாமா கதைகளின் மாய உலகில் இருந்து உத்வேகம் பெற்று உருவாகியுள்ளது. மந்திர சக்திகள், மறக்கப்பட்ட ராஜ்ஜியங்கள், வீரர்கள், சிங்கங்கள், ஓநாய்கள் மற்றும் புராண மரபுகள் நிறைந்த இந்த உலகம், இந்திய நாட்டுப்புறக் கதைகளை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து திரையில் உயிர்ப்பிக்கவுள்ளது.




இந்தப் படத்திற்காக சந்தீப் கிஷன் தனது திரைப்பயணத்தில் இதுவரை இல்லாத மிகப்பெரிய மாற்றத்தை மேற்கொண்டுள்ளார். பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஆடை அலங்காரம், புதிய தோற்றம் மற்றும் முற்றிலும் மாறுபட்ட உடல் மொழியுடன் சக்திவாய்ந்த போர்வீரராக அவர் திரையில் தோன்றுகிறார். அவரது இந்த புதிய அவதாரம் ரசிகர்களுக்கு வித்தியாசமான திரை அனுபவத்தை வழங்கும் என படக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பிரம்மாண்டமான தலைப்பு அறிவிப்பும், மிரளவைக்கும் ஃபர்ஸ்ட் லுக்கும் வெளியாகியுள்ள நிலையில், ‘கரிகாலா’ திரைப்படம் குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

படத்தின் மற்ற நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் ‘கரிகாலா’ திரைப்படம் தொடர்பான மேலும் பல முக்கிய அறிவிப்புகள் விரைவில் வெளியாகும்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020